


# கலைக்கதிர்

சுதந்திர தினச் சிறப்பிதழ்

**1976**



என் அக்கறையெல்லாம்
சமாதானங்கள் கேட்பதில்
இல்லை -
சாதனைகளில்,
சாதனைகளில்......

- இது தந்தை நேரு.



- நாட்டு வளர்ச்சியின் பயன் -
- நல்லறிவின் திறம் -
- செல்வச் செழிப்பின் வளம் -

இவை கடையனும்
கடைத்தேற வழிவகுப்பதாக
இருக்கவேண்டும்.

- இது அந்தத் தந்தைவழி
செல்லும் மகள் காட்டும்
நெறி.



சுதந்திர நாடு என்றும் சுதந்திரமாகத் திகழ நமது பாரதப் பிரதமர் அளித்த 20 அம்ச பொருளாதாரத் திட்டத்தினை ------------

இச் சுதந்திர நாளன்று சிந்தித்துச்செயல்படுவோம்

1 விலைவாசியைக் குறைத்தல்.
2 நிலமற்றவர்களுக்கு நிலமளித்தல்.
3 வீடற்றவர்களுக்கு வீட்டுமனைகள் அளித்தல்.
4 அடிமை ஊழியம் அகற்றிடுதல்.
5 கிராமப்புறக் கடன் சுமையை இறக்கிடுதல்.
6 வேளாண்மைத் தொழிலாளர்களின் குறைந்த ஊதியத்தை உயர்த்திடுதல்.
7 நிலநீர் எடுத்து நீர்வளம் பெருக்குதல்.
8 மின்சார உற்பத்தியை உயர்த்துதல்.
9 கைத்தறி நெசவாளர் துயர் துடைத்தல்.
10 தரமான துணிகளை மலிவு விலையில் வழங்குதல்.
11 நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு அமைத்தல்.
12 வரி ஏய்ப்பவரை வன்மையாகத் தண்டித்தல்.
13 கள்ளக் கடத்தல்காரர்களைக் கடுமையாகத் தண்டித்தல்.
14 தொழில்வளம் பெருக்கத் துணை புரிதல்.
15 தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்குபெறத் துணைநிற்றல்.
16 போக்குவரத்துக்குத் தேசிய அனுமதி அளித்தல்.
17 நிலையான வருவாய் பெறுவோர்க்கு நிம்மதி அளித்தல்.
18 மாணவர்கள் குறையைத் தீர்த்தல்.
19 மலிவு விலையில் புத்தகம், எழுதுபொருள் அளித்தல்.
20 படித்த இளைஞர்களுக்குப் பாங்கான வேலை அளித்தல்.

கலைக்கதிர் சுதந்திரதினச் சிறப்பிதழ்
15-8-1976

# இதனுள்.....


☐ உள்ளத்தில் உண்மையொளி உண்டானல்
—பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன் 3

☐ பொருளாதார முன்னேற்றத்திற்கு- புதிய திட்டம்
—திருமதி இந்திரா காந்தி 6

☐ திட்டம் வெற்றிபெற நம் கடமைகளைச் செய்வோம்
—திரு. ஆர். வேங்கட்ராமன் 11

☐ இருபது அம்சப் பொருளாதாரத் திட்டமும் ஆசிரியர்களும்
—டாக்டர். எஸ். சுப்பிரமணியம் 15

☐ 20 அம்சப் பொருளாதாரத் திட்ட வெற்றிக்கு மாணவர் பங்கு
—திரு. க. பொன்னுச்சாமி 17

☐ பொருளாதாரத் திட்டத்தில் மாணவர் பங்கு
—திரு. இரா. சீனிவாசன் 19

☐ மாணவர்களும் பிரதமரின் பொருளாதாரத் திட்டமும்
—செல்வி மு. கமலவேணி 22


இலவச இதழ்


☐ ☐ ☐ ஆசிரியர் திரு. ஜி. ஆர். தாமோதரன்

# உள்ளத்தில் உண்மையொளி உண்டானால்...

● **பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன்**

சுதந்திரநாடு என்றும் சுதந்திரமாக வாழ நமது பாரதப் பிரதமர் அளித்துள்ள 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தினை நம் நாட்டு அறிஞர்கள் மட்டுமன்றி உலகப் பேரறிவாளர்கள் எல்லோருமே போற்றுகின்றனர். மனம் போன போக்கில் போய்க்கொண்டிருந்த நமது நாட்டின் நிலைமைகளையும் ''தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்'' என்ற மனப்பாங்கினையும் மாற்றி ஒரு கட்டுப்பாடான வரம்பிற்குள் கொண்டுவந்து, உலக மக்கள் வியக்கும் வண்ணம் பணவீக்கத்தினை ஓரளவு கட்டுப்படுத்தியுள்ளதற்கு நம் பாரதப் பிரதமரின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டமே காரணமாகும்.

20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தினை வகைப்படுத்திப் பார்த்தால் அவை ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' ''ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்'' ''எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்ற பாரதியின் வாக்குகளை நினைவாக்கிச் செயலாக்கவல்ல வழிகளைக் காட்டுவது இத்திட்டம் என்பது புலப்படும்; மேலும் கடமை உணர்வையும் உரிமை வாழ்வையும் தரவல்ல திட்டம் என்பதும் தெரியவரும்; நாட்டின் லட்சியமாக அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ள ஜனநாயக சோஷலிச சமுதாய அமைப்பினை உருவாக்கவல்ல திட்டம் என்பதும் தெளிவாகும். ஜனநாயக சோஷலிச சமுதாயத்தினை உருவாக்க கட்டுப்பாடும் ஒழுங்கும் உழைப்பும் இன்றியமையாது வேண்டப்படுவன. அத்தகைய கட்டுப்பாட்டினை உருவாக்கி ஒழுங்குமுறையை வளர்த்து ஏமாற்றாது உழைக்கும் மனப்பான்மையை உண்டுபண்ணவல்லதே இத்திட்டம் என்பதனையும் உணர்கின்றோம். பாரதியின் கவிதைக்கனவுகளை இலக்கிய மேடைகளிலே வாய்பிளக்க முழங்கிக்கொண்டிருந்தோம்; அரசியல் சட்டக்குறிக்கோள்களை வெறுமே படித்துப் படித்து ஆராய்ந்து கொண்டிருந்தோம். இப்போது இலக்கியக் கனவும் சட்டத்தின் குறிக்கோளும் நடைமுறைக்கு வரத் தொடங்கிவிட்டன. இவற்றிற் கெல்லாம் உறுதியும் உண்மைத் திறமும் கொண்ட நம் பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் பெருமையே காரணமாகும்.

நமது நாட்டில் மேடைப் பேச்சுக்கும் சொல்லலங்காரங்கட்கும் குறைவில்லை. ஜனநாயக சோஷலிச சமுதாய அமைப்பினை உருவாக்கப் போகிறோம் என்று மார்தட்டியும் தோள்கொட்டியும் வீராவேசமாகப் பேசி மாலையையும் மரியாதையையும் மட்டும் எதிர்பார்த்து; புதிய எண்ணம்,

புதிய கருத்து, புதிய வழிமுறைகள் ஒன்றுக்கும் வழிவகுக்காது; கோஷங்கள், வேஷங்கள், வலையங்கள், வாழ்த்துக்கள் போன்றவற்றிலேயே காலம் கழித்து; வளர்ச்சிக்கு வழிவகுக்கத் தலைப்படாது; தான்தோன்றித் தம்பிரான்களாய்ச் செயல்பட்டு மக்களை மயக்கத்தில் ஆழ்த்திப் பலர் பெருமை பாராட்டிக்கொண்டிருந்த சூழ்நிலையில் இந்திய நாட்டின் இருளகற்றி ஒளிகாட்டும் ஒளிவிளக்காய்த் தோன்றிய, இந்திய நாட்டினைக் காக்க அருமருந்தாய் வந்த ஒன்றுதான் நமது பாரதப் பிரதமரின் பொருளாதாரத் திட்டமாகும்.

வண்டி சிறப்பாக முன்னேறிச் செல்ல பூட்டப்பெற்ற இரண்டு மாடுகளும் ஒருசீராக இணைந்து ஓடவேண்டும். அதுபோன்றுதான் நாட்டின் நடப்பும். நிர்வாகமும் மக்களுமே நாடாகிய வண்டியில் பூட்டப்பெற்ற இரண்டு எருதுகளாகவும் அவற்றை நடத்திச் செல்லும் சாரதியாய் அரசும் இயங்குகின்றன. சாரதி எவ்வளவு திறமைசாலியாய் இருந்தாலும் எருதுகளின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை. நமக்கு நல்ல சாரதியாய் திருமதி இந்திரா காந்தி அமைந்துள்ளார். நிர்வாகமும் மக்களும் இதனை உணர்ந்து ஒத்துழைத்தால் ''பாரத நாடு பழம்பெரும் நாடு. நாமதன் மக்கள்'' என்ற பெருமையோடு நம்மையும் வாழவைத்து உலகம் வாழவும் வழிகாட்ட முடியும். இந்த நல்ல நோக்கத்தோடுதான் அம்மையார் அவர்கள் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தினைக் கொண்டு வந்துள்ளார். திசைக்கு ஓர் இழுப்பு, திருப்பத்தில் ஓர் இடக்கு என்று முரட்டுத்தனம் புரிந்து கொண்டிருந்த எருதுகளை அடக்கிச் சாரத்தியம் செய்ய நம் பிரதமருக்கு வலிமையும் நாட்டு மக்களுக்கு முன்னேற்ற நாட்டமும் கொடுத்தது 20 அம்சத் திட்டமேயாகும். இத்திட்டத்தின் திறம் தெரிந்து மக்கள் ஒத்துழைத்தால் ஜனநாயக சோஷலிசம் மலர்வதைப் பாரதம் காணும்; பாரதத்தின் பொலிவும் வலிவும் கண்டு உலகமே வியக்கும்.

திட்டத்தின் கூறுகளும் நோக்கமும் மிகச் சிறந்தனவென்றாலும் சுயநலம், நாட்டுப்பற்றின்மை, முரண்பட்ட போக்கு, பேராசை, பிறநாட்டுக்கு அடகுவைக்கும் அடிமை மனப்பாங்கு ஆகிய தாழ்வான உணர்வுடையவர்களால் திட்டத்திற்கு மறைமுகமான தொல்லைகள் ஏற்பட்டு வருதலை உணர்கின்றோம். அத்தகையவர்கள் மனம்மாறி ''தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு'' என்று எண்ணுகின்ற சின்ன மனம் மாறி ''தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே'' என்று எண்ணுகிற தாயுள்ளம் கொண்டோராய் வாழச்செய்ய சமுதாயத் தொண்டர்களாகிய ஆசிரியப் பெருமக்கள், மாணவ இளைஞர்கள், மருத்துவப் பேரறிஞர்கள், பொறியியல் வல்லுநர்கள், ஊராண்மைக்கழகத் தலைவர்கள் போன்றவர்கள் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் உயிர்த்துடிப்பை உணர்ந்து தாங்களே எடுத்துக்காட்டாய்ச் செயல்பட்டு உதவ வேண்டும். இவர்கள் எல்லாம் முழுமூச்சாய் முயன்றால், வஞ்சனையும் சூதும் தோற்றோடிப் போகும். வாய்மையே வெல்லும் என்பது உறுதி.

எனவே, எத்தனையோ இடர்ப்பாடுகளிலிருந்து இந்தியப் பெரு நாட்டினைக் காத்த அன்னை இந்திரா அவர்கள் நாட்டிற்கு அளித்துள்ள 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் வெற்றிபெறும். அம்மையார் அவர்களின் வெற்றிக்கும் சமுதாய நலனுக்கு அவர் ஆற்றிவரும் தொண்டிற்கும் அவரிடம் காணப்படும் அளவிடமுடியாத பொறுமையே காரணம் ஆகும். அவர்களைத் தூற்றியவர்கள் பலர். தரம் குறையத் தாக்கியவர்கள் பலர்; என்றாலும் அவர்கள் அவைகளைச் சகித்துக் கொண்டு, நாடு, நாடாகத் திகழ என்ன செய்ய வேண்டும், இந்திய நாட்டின் சுதந்திரத்தினைப்பேணிக் காக்க என்ன பணியை மேற்கொள்ளவேண்டும் என்று இடையருது சிந்தித்தும் செயல்பட்டும் வருகின்ருர். தன்னலம் ஒன்றே குறியெனக்கொண்டு தற்புகழ்கூறிடாது, மக்கள் மனஅமைதியும் நல்வாழ்வும் பெற்று வாழ வேண்டும் என எண்ணியும் பேசியும் செயல் பட்டும் வருவதனுல்தான் அவர் ஒரு பொருளாதாரப் பட்டதாரி இல்லையென்ருலும் அவர் கூறும் திட்டங்கள் பொருளாதாரப் பேரறிஞர்களையும் வியக்க வைக்கின்றது; அவர் ஓர் அரசியல் பேரறிஞர் இல்லையென்ருலும் சிறந்த இராஜதந்திரி என எல்லோரையும்எண்ணவைக்கின்றது; அவர் ஒரு விஞ்ஞான வித்தகர் இல்லையென்ருலும் விஞ்ஞான மனப்பாங்கை அவரிடம் காண முடிகின்றது; அவர் ஒரு சமூகப்பணிப்பட்டம் பெற்றவர் இல்லையெனினும் சமூதாயச் சீர் திருத்தச் செம்மலாக அவரைத் திகழ வைக்கின்றது; இதைத் தான் பாரதி பாடினுன்; ''உள்ளத்தில் உண்மையொளி உண்டானுல் வாக்கினிலே ஒளியுண்டாகும்'' என்று நாட்டு மக்கள் நலம் உற்று வாழவும் நானிலத்தவர் மேல்நிலை எய்தவும், நாளும் சிந்தித்துச் செயல்படுகின்ற காரணத்தால் ஒரு சிறந்த பொருளாதார நிபுணராக, சிறந்த இராஜதந்திரியாக மிகப்பெரிய சமூகச் சீர் திருத்தச் செம்மலாக, விஞ்ஞான மனப்பாங்குடையவராகஅவரைக் காண இயலுகின்றது. நாட்டில் உள்ள எல்லாவகையான மக்களும் சீரான, முறையான வளர்ச்சி பெற்று மனம் மகிழ்வுற வாழச் செய்ய வழி வகுக்கும் பொருளாதாரத் திட்டத்தினை அவரால் நாட்டிற்கு நல்க முடிந்தது.

''நாம் எல்லோரும்எப்போதும் நம் நாட்டுப் பணிக்கே நம்மை அர்ப்பணிக்கவேண்டும்.''

—பிரதமர் இந்திரா காந்தி

இத்திட்டத்தினைக் கொண்டு வந்து அதனை விளக்கிக் கூறிய போது நமது பிரதமர் ஆற்றிய உரையினையும் பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களின் தலைமையில் தொழிலமைச்சராக விருந்து தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்த திருவாளர் ஆர். வேங்கட்ராமன் அவர்களின் கருத்தினையும் ஆசிரியர்கள்,மாணவர்கள் இதுபற்றிக் கூறுவதனையும் தமிழ்நாட்டு மக்கள் எண்ணிப்பார்த்துச் செயல்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தால் **கலைக்கதிர்** சிறப்பான இந்தத் தனிஇதழினைச் சுதந்திர நாளன்று (15—8—1976) வெளியிடுகின்றது. இதனை வெளியிட உதவிய பி. எஸ்.ஜி. நிறுவனங்கள் எல்லாவற்றிற்கும் எம் நன்றியுரியதாகுக.

# பொருளாதார முன்னேற்றத்திற்கு—புதிய திட்டம்...

● *திருமதி இந்திரா காந்தி*

நான் இன்று உங்களிடையே அரசு மேற்கொள்ளவிருக்கும் சில பொருளாதாரத் திட்டங்களைப் பற்றிப் பேசவிருக்கிறேன். அவைகளில் சில புதியவை; மற்றவை முன்பே துவக்கப்பட்டவை. ஆனால் மிகுந்த ஆற்றலோடும், உறுதியோடும் செயல்படுத்தப் படவேண்டியவை. தயவுசெய்து மந்திர குணப்படுத்தலையும், நாடக முடிவுகளையும் எதிர்பார்க்காதிர்கள்.

வறுமையை ஒழிக்க ஒரே மந்திரம்தான் உள்ளது. அது, தெளிவான நோக்கு, திடமான சிந்தனை, மிகுந்த கட்டுப்பாடு ஆகியவற்றுடன் கூடிய கடின உழைப்புத்தான்! நம்மிடத்தில் உள்ள ஒவ்வொருவரும்—நமக்காக மட்டுமல்லாமல், நம் சகோதர மக்களுக்காகவும், அதிகமாக உழைக்க உறுதிகொள்ள வேண்டும். அரசுக்குச் சொந்தமானவைகளை அதிகம் மதிக்க வேண்டும். அவைகளை அழிப்பது நமக்கு நாமே அழிவைத் தேடிக்கொள்வதாகும். எல்லா வகையிலும் சிக்கனத்தை மேற்கொள்ள வேண்டுமென்ற கண்டிப்பான விதிமுறை நமக்குத் தேவை. எதிலும் படாடோபமாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் கடமை அரசுக்கு உண்டு; ஆனால் குடிமக்களுக்கு அதிலே பொறுப்பு மிகுதியும் உண்டு. அதுவே நாட்டின் வாழ்வைச் செழிக்கச் செய்யும் ஒரே வழியாகும்.

சட்டத்தை மீறும் இயக்கம், தேசிய நற்பணிகள் நடைபெற முடியாமல் முடக்குதல், நம்முடைய பாதுகாப்புப் படைகளை ஒழுங்கீனமாகவும், கீழ்ப்படியாமல் நடந்துகொள்ளவும் தூண்டுதல் ஆகியவை பொருளாதாரக் குழப்பத்திற்கும், சீர்குலைவுக்கும் வழிவகுத்ததுடன், பிரிந்துபோகும் எண்ணத்திற்கும், வெளிநாட்டு ஆபத்திற்கும் எளிதில் இலக்காகும் தன்மையை நமது நாட்டிற்கு ஏற்படுத்தியுள்ளன. வெறுப்புணர்ச்சி என்னும் புகை ஓரளவுக்கு விலக்கப்பட்டதால், நம்முடைய பொருளாதார இலக்கினை மிகத் தெளிவாகவும், விரைவாகவும் நோக்க முடிகிறது.

நமது பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளில் முன்னேறுவதற்கான புதிய வாய்ப்பை, நெருக்கடிநிலை நமக்கு அளித்துள்ளது.

1) முதலாவதாகவும், முக்கியமானதாகவும் உள்ள சவால், விலைவாசியைப் பொறுத்தது ஆகும். கடந்த 5 நாட்களில் பல்வேறு பொருள்களின் விலைவாசி இறங்குமுகமாக உள்ளது. உற்பத்தியை ஊக்குவிக்கவும், கொள்முதலை விரைவுபடுத்தவும், இன்றியமையாப் பொருள்களின் விநியோகத்தை முறைப்படுத்தவும், அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அந்நியச் செலாவணி ஆதாரங்களில் நாம் கொண்டுள்ள கொள்கை மனநிறைவு அளிப்பதாக உள்ளது. எனவே, விநியோகம் போதுமானதாக இருக்கத் தேவையான இடத்தில் இறக்குமதி செய்யப்படும். விலைவாசிப் பட்டியலையும், இருப்பு அட்டவணையையும் அறிவிக்க வேண்டுமென்று வியாபாரிகளுக்கு ஆலோசனை கூறும்படி மாநில அரசுகள் முன்பே கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளது. பதுக்கலில் ஈடுபட்டுள்ளோரும் சட்டத்தை மீறுவோரும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

பணவீக்கத்தைத் தடுப்பதற்கான இத்தகைய யுக்திகள் தொடர்ந்து நடைபெறவேண்டும், தேர்ந்தெடுத்த அடிப்படையில் கடன் உதவிகளை மிகுந்த கவனத்துடன் முறைப்படுத்த வேண்டும். அரசுத்துறைகளிலும், பொதுத்துறைகளிலும் அனுவசியச் செலவுகளை தவிர்க்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. நமது மக்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்கள். நாம், உச்சவரம்புச் சட்டத்தைச் செயல்படுத்தி, புதிய இரட்டிப்பு ஆர்வத்துடன் உபரி நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கவேண்டும். நில நிலவிவரக் குறிப்பேடுகளைத் தயாரித்து முடிப்பதற்கு ஆங்காங்கேயுள்ள உள்ளூர் மக்களின் உதவியை வேண்டுகின்றேம். பழங்குடி மக்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்படாதிருக்கவேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தப்படும்.

3. கிராமப்புறங்களில் வீட்டு மனைகள் அளிக்கும் திட்டம் பெருமளவில் விரிவுபடுத்தப்படும். நிலமற்ற தொழிலாளர்கள் தங்களுடைய பண்ணையார்களுக்குச் சொந்தமான வீட்டுமனைகளில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குமேல் வாழ்ந்திருப்பார்களேயானல் அவ் வீட்டு மனைகளின் உரிமையை நிலமற்ற தொழிலாளர்களுக்கே அளிப்பதற்கான சட்டம் புகுத்தப்படும். அத்தகைய வீட்டு மனைகளில் இருந்து நிலமற்ற தொழிலாளர்களை வெளியேற்றிவிட முயன்ருல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அடிமை ஊழியமுறை காட்டுமிராண்டித் தனமானது! அது ஒழிக்கப்படும். அத்தகைய அடிமை ஊழியர்களின் பணிகளைப் பயன்படுத்துவதற்குத் தற்பொழுது பாதுகாப்பு அளித்து வரும் எல்லா ஒப்பந்தங்களும் சட்டத்திற்குப் புறம்பானதாக அறிவிக்கப்படும்.

5. கிராமப்புற மக்களின் கடன் சுமையை அறவே அகற்றிவிடுவதற்குப் படிப்படியான நடவடிக்கைகளை எடுத்திடத் திட்டமிட்டுள்ளோம். நிலமற்ற தொழிலாளர்களுக்கும், கிராமத் தொழிலாளர்களுக்கும், இரண்டு எக்டேருக்கும் குறைவான நிலம் வைத்துள்ள சிறிய மிகச்சிறிய உழவர்களுக்கும் நிறுவனக் கடன் உதவி அளிப்பதற்குரிய மாற்று நிறுவனங்கள் தோற்றுவிப்பதற்கான புதிய திட்டங்கள் வகுக்கப்படும். அதே நேரத்தில் மேற்கூறிய தொகுதியினரிடமிருந்து கடனை வசூல் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் வழக்குகளையும், ஜப்தி

களையும் நிறுத்திவைக்கும் சட்டம் கொண்டுவரப்படும். கூட்டுறவுகள், வணிக வங்கிகள், அரசுகள் ஆகியவற்றிலிருந்து பெற்றுள்ள கடன்கள் இத்திட்டத்தில் அடங்காது.

6. நமது சமுதாயத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களே மிகவும் மோசமாகச் சுரண்டப்படும் பிரிவினர்களாக உள்ளனர். தற்பொழுது செயலில் உள்ள குறைந்தபட்சக் கல்விச் சட்டங்கள் மறு ஆய்வு செய்யப்படும். எங்கெங்கு அவசியமோ, அங்கெல்லாம் குறைந்தபட்சக் கல்வியில் தகுந்த உயர்வு அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7. உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எல்லோரும் முற்படவேண்டும். வேளாண்மை மற்றும் தொழில் உற்பத்தி உயர்வுக்கு நீரும் மின்சக்தியுமே திறவுகோலாக விளங்குகின்றன. குறைந்தது 50 இலட்சம் எக்டேர் நிலத்திற்குப் புதிதாகப் பாசன வசதி அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மெய்ப்பிக்கப்பட்டுள்ள நில நீர் ஆதாரங்கள் உடனடியாகப் பயனுக்குக் கொண்டுவரப்படும். பாசனத்திற்காகவும், சிறப்பாக வறட்சிப் பகுதிகளில் குடிநீருக்காகவும் நிலநீர் ஆதாரங்களைக் கண்டறிவதற்கான ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8. மின்சக்தி நிலைமை ஓரளவு முன்னேறியுள்ளது. மேலும் புதிதாக 2,600 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின்சக்தி உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் போதிய நிதி அளிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலத்தேவையை முன்னிட்டு அனல் மின்நிலையங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டு உள்ளது. மாநில மின்வாரியங்கள் ஒருமுகப் படுத்தப்பட்டு வருகின்றன.

9. வேலைவாய்ப்பு அளிப்பில், வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித்தொழிலே சிறந்து விளங்குகிறது. நெசவாளர்களுக்குத் தேவையான உள்ளீடு பொருள்கள், நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். கைத்தறிக்குத் தனியாக ஒரு மேம்பாட்டு ஆணையாளர் நியமிக்கப்படுகிறார். நெசவாளர்களுக்கு மிகுந்த பாதுகாப்பு அளிப்பதற்காக, கைத்தறிகளுக்கான ஒதுக்கீடு பற்றிய கொள்கை வகுக்கப்பட்டு வருகிறது.

10. ஆலைத்துறையில் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் துணி உற்பத்தி செய்யும் திட்டம் முன்னேறி வருகிறது. அதனால், சாதாரண மக்கள் அணியும் வேட்டிகள், புடவைகள், துணிகள் ஆகியவை சிறந்த தரத்தில் உள்ளன. அவைகள் ஏராளமான விற்பனை நிலையங்கள் வாயிலாகக் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

11. நாட்டின் நடப்பில் நகர்ப்புற நிலங்களிலிருந்து பலருக்கு அதிர்ஷ்டம் ஏற்பட்டுள்ளது. நகர்ப்புற நிலை விலையேற்றமும் நகர்ப்புற சொத்துக்களின் அடர்த்தியும் மிகுந்த ஏற்றத்

தாழ்வை ஏற்படுத்தியுள்ளதுடன் ஒழுங்கற்ற முறையில் நகர்ப்புற வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குடியிருப்பு இல்லாத காலிமனை, தேவைக்குமேல் அதிக அளவில் நிலம் வாங்குதல், ஆகியவற்றிற்கு உச்சவரம்பு அமைப்பதற்கும், புதிய குடியிருப்புகளின் அடித்தளப்பரப்பைக் கட்டுப்படுத்துவதற்கும் நகர்ப்புற மற்றும் நகர்ப்புறமாகக்கூடிய பகுதி நிலங்களைச் சமூக உடைமை ஆக்குவதற்கும் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

12. வரி ஏய்ப்பு செய்வது குற்றமாகும். இவ்வாறு ஏய்க்கப்பட்ட கறுப்புப் பணத்தில் பெரும் பகுதி ஆடம்பர வீடுகளைக் கட்டுவதற்கே செலவிடப்படுகிறது. நகர்ப்புற சொத்து மதிப்பு குறைத்துக் காட்டப்படுகிறது. இத்தகைய சொத்துக்களை மதிப்பிடுவதற்காகத் தனி சோதனைப் படைகள் அமைக்கப்படும். தண்டனை கடுமையாக இருக்கும். சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் எண்ணிவருகிறோம்.

13. கடத்தல்காரர்களை ஒழிப்பதில் நமது இயக்கம் தீவிரப்படுத்தப்படும். சட்ட நுட்ப அடிப்படையில் அவர்கள் வெளிவந்துள்ளது நமது முயற்சியை முறியடித்துள்ளது. சில குற்றங்களில் அவர்கள் முன்கூட்டியே ஜாமீன் பெற்றுள்ளனர். கடத்தல்காரர்களின் சொத்து —அவர்களின் சொந்தப் பெயரில் இருந்தாலும் அல்லது பினாமியாக இருந்தாலும் பறிமுதல் செய்யப்படும்.

14. உரிமம் வழங்கும் முறைகள் புதிய முதலீட்டைத் தாமதப்படுத்துவதாக அமைந்துள்ளன. இவை எளிதாக்கப்படும். இறக்குமதியோ அல்லது அரசு உதவியோ தேவைப்படாத தொழிற்சாலைகளில் முதலீடு செய்யும் அளவு உயர்த்தப்படும்.

அதே நேரத்தில் உரிமங்கள் தவறான முறைகளில் பயன்படுத்தப்படுகிறது என்பதனையும்நான் குறிப்பிட்டாக வேண்டும். இறக்குமதி - ஏற்றுமதி விதிமுறைகள் திருத்தப்பட்டு வருகின்றன. சட்டத்தை மீறினால் விரைவாகப் பரிசோதனை நடத்தி தண்டிப்பதுடன் உற்பத்திப் பொருள்கள் பறிமுதல் செய்யப்படும்.

15. தொழிற்சாலைகளில் அதுவும் குறிப்பாக பணிக்கூட மட்டத்திலும் உற்பத்தித் திட்டங்களிலும் தொழிலாளர்களை ஈடுபடுத்திப் பங்குகொள்ள வைக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

16. ரயில்மூலம் நடைபெறும் உணவு தானியங்கள், நிலக்கரி, எஃகு, சிமெண்ட் ஆகியவற்றின் போக்குவரத்து கடந்த சிலமாதங்களில் முன்னேறியுள்ளது. லாரிகள் மூலமாகப் பொருள்களை அனுப்புவதில் உள்ள தடைகள் அகற்றப்படும். இதற்காக நாடு முழுவதும் செல்வதற்குரிய அனுமதி வழங்கும் முறை புகுத்தப்படும்.

17. நிலையான வருவாய் பெற்றுவரும் மக்கள் கடந்த சில ஆண்டுகளில் கடுமையான துன்பங்களுக்கு உள்ளாயினர். அவர்களுக்கு உடனடி நிவாரணம்

தேவை. வருமான வரிக்குள்ள குறைந்த பட்ச விதிவிலக்கு அளவு ரூ. 6,000-லிருந்து ரூ. 8,000-த்திற்கு உயர்த்தப்படும்.

18. ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்து தொலைதூரத்தில் தங்கி உயர் கல்வி கற்க முயன்றால், மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகின்றார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காக எல்லா மாணவ விடுதிகளுக்கும், அனுமதிக்கப்பட்ட தங்கும் விடுதிகளுக்கும் இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கப்படும்.

19. கல்வித்துறையில் மேற்கொள்ளவேண்டிய மற்றொரு முக்கிய நடவடிக்கை, எல்லாப் பள்ளிக்கூட, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தேவையான பாடப் புத்தகங்களும் எழுது பொருள்களும் நியாயமான விலையில் கிடைத்திடச் செய்வதாகும். விலைகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படும். புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்படும்.

20. கல்வி கற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கித்தரும் முறைகளில் ஒன்றாக வேலைப் பழகுநர் சட்டம் தகுந்த முறையில் திருத்தி, அமைக்கப்படும். இதன்மூலம் நமது பொருளாதாரத்தில் முறையாக அமைக்கப்பட்ட துறையைச் சார்ந்த நிர்வாகத்தினர் குறிப்பிட்ட காலத்திற்கு ஏராளமான வேலைப்பழகுநர்களை அமர்த்திக் கொள்ள முடியும். இவ்வாறு வேலை பழகுவதற்குத் தேர்ந்தெடுப்பதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், பழங்குடியினருக்கும், ஊனமுற்றவர்களுக்கும் உரிய பங்கு கிடைக்கச் செய்வதில் சிறப்பாகக் கவனம் செலுத்தப்படும்.

அடுத்துவரும் வாரங்களில் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்களின் பல்வேறு பகுதிகளைச் சுருக்கமாகத்தான் நான் விவரித்துள்ளேன். இதர விவரங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன. மேற்கொண்டு செய்யப்பட விருப்பவை அவ்வப்போது அறிவிக்கப்படும். அவைகள் அனைத்தும் சேர்ந்து நாட்டின் பொருளாதாரத் தோற்றத்தில் ஒரு புதிய பொலிவை ஏற்படுத்தும் என்பதில் எனக்கு ஐயமில்லை. மிக மிக அவசரமானது என்னவென்றால், நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, உதவி செய்ய இயலவில்லை என்ற உணர்வை உதறியெறிய வேண்டும். கடந்த சில மாதங்களில் உருவாகியுள்ள கலவரத்தின் மோசமான அம்சம் வெறுப்புணர்ச்சியைத் தூண்டியுள்ளதும் தேசிய தன்னம்பிக்கையைச் சீர்குலைத்துள்ளதுமேயாகும்.

நாட்டின் நலத்திற்காக தீராப் பயணம் தொடர வேண்டும் என்ற உணர்வு பெற தற்பொழுது ஒரு புதிய வாய்ப்பு பிறந்துள்ளது. நம் பணியைத் தொடர்ந்து செய்து வெற்றி நடைபோடுவோம்.

(இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஜூலை 1 1975 அன்று வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்)

# திட்டம் வெற்றிபெற நம் கடமைகளைச் செய்வோம்

● **திரு ஆர். வேங்கட்ராமன்,** எம்.ஏ., பி.எல்.

இந்தியநாடு சுதந்திரம் பெற்ற பின்னர் வளர்ச்சித் திட்டங்களில் பெரும் பொருளை முதலீடு செய்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் காலத்தில் இவ்வாறு முதலீடு செய்யப்பட்ட தொகை 100 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும். இதன் காரணமாக நாடு பல துறைகளில் முன்னேறியுள்ளது; பெரிய பெரிய எஃகாலைகள், பொறியியல் நிறுவனங்கள், மின்னியல் நிறுவனங்கள், உரத் தொழிற்சாலைகள், எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலைகள், கெமிக்கல் தொழிலகங்கள், கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் போன்ற பல பெரிய தொழிலகங்கள் உருவாகியுள்ளன. நம்நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் சுதந்திரம் பெற்ற நாடுகளைவிட நாம் பல மடங்கு தொழில் துறையில் முன்னேறியுள்ளோம். மேற்கு ஆசிய நாடுகட்கும், ஆப்பிரிக்க நாடுகட்கும், தென்கிழக்கு ஆசிய நாடுகட்கும், தொழில்நுட்பத் திறனை உதவும் அளவுக்கு முன்னேறியுள்ளோம். உழவியல்துறையில் நாம் பெற்றுவரும் முன்னேற்றத்தின் காரணமாக 1961-இல் 80 மில்லியன் டன்னுகை இருந்த நம் உணவு உற்பத்தி 1975 இல் 116 மில்லியன் டன்னுகை உயர்ந்துள்ளது. இவ்வளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டும் சுதந்திரம் பெற்றதிலிருந்து வளர்ந்துவரும் மக்கள் தொகையும், நம் திட்டங்களால் ஏற்பட்ட பயன்கள் ஏழை எளிய மக்களுக்கும், தேவை உடையோர்க்கும் நேராகச் சென்று சேர இயலாமற் போனதும் நம்நாடு இன்னும் பிற்பட்ட நாடாகவும் ஏழை நாடாகவும் விளங்கக் காரணமாகின்றன.

நம்நாட்டுத் திட்டங்கள் முன்னேற்றத் திட்டங்களே தவிர மக்கள் திட்டங்களாக இல்லையெனவும் பொதுமக்களுக்கு நலம் பயக்கும் திட்டங்களாக இல்லையெனவும் குறைகூறப்படுதலை நாம் கேட்கின்றோம். நம் நாட்டுப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சமுதாயத்தின் அடித்தளத்தில்



உள்ள மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர். கீழ்மட்ட மக்கள் திட்டங்களால் பெற்ற பயனை வைத்தே முன்னேற்றத்தினை எடைபோடக் கூடியவர். அவர்களும் நிலைமைகளை உணர்ந்து ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை நினைந்து துன்புற்று, 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தினை 1975 சூலைத் திங்கள் முதல் நாள் கொண்டு வந்து எழை எளிய மக்களின் உயர்வுக்காக இவைகளை உடனடியாகச் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். இந்த 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் முன்பே கொண்டுவரப் பட்டுச் செயல்படுத்தப்படாமலிருந்த சில கூறுகளையும் புதிய சில கூறுகளையும் கொண்டது; பயனைக் குறியாகக் கொண்டது.

இத் திட்டத்தின் தலையாய குறிக்கோள் விலையைக் குறைப்பது. 1973—74 இல் விலைகள் 59 சதவிகிதம் உயர்ந்தன. விலையேற்றத்தின் சீற்றம் பொருளாதார வளர்ச்சியின் குரல்வளையை நெறிப்பதாக இருந்தது; ஏழை எளிய மக்களால் அடிப்படைத் தேவைகளைக்கூடப் பெறமுடியாத நிலை உருவாயிற்று. விலையைக் கட்டுக்குள் அடக்கவும், பதுக்கலைத் தடுக்கவும், கொள்ளை லாபத்தினை இல்லாமல் செய்யவும், பொருட் குவியலைப் போக்கவும், சரியான வழங்குமுறைகளை வகுக்கவும் நமது பிரதமர் அவர்கள் மிகக் கடுமையான, சரியான வழிமுறைகளை வகுத்துள்ளார்கள். இதன் காரணமாக விலைவாசி கடந்த ஓராண்டில் 8 சதவிகிதத்திற்கு மேல் குறைந்துள்ளது; மேலும் சரிவு முகமாக உள்ளது. இது குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

சென்ற ஆண்டில் உலகில் வேறு எந்த நாடும் இந்தியாவைப் போன்று இவ்வாறு விலையேற்றத்தினைத் தடுத்துக் குறைக்கவில்லை. பணவீக்கத்தின் அச்சுறுத்தல் உலகில் எல்லா நாடுகளிலும் இருக்கும்போது இந்திய நாடு ஒன்றில்தான் பணவீக்கத்தின் தடிப்பு வாடிற்று. இது ஒரு பெரிய சாதனை. இந்தியாவின் பொருளாதார நிலைகளை ஆராய வந்த உலகவங்கியின் வல்லுநர் குழு இந்தச் சாதனையைப் பெரிதும் பாராட்டி உள்ளது. வாழ்க்கையின் அடிப்படைத் தேவைப் பொருள்களின் விலை குறைந்து, ஏழை எளியவர்க்குக் கிடைத்து, ஒருபெரிய பளுவைக் குறைத்துள்ளது.

நம்நாட்டு நாட்டுப்புற மக்களின் நலத்தில் சிறப்புக் கவனம் செலுத்தும் பிரதமர் அவர்கள் நில உச்சவரம்புச் சட்டத்தினைத் தீவிரமாக்கி அளவுக்குமேல் உள்ள நிலம் நிலமற்றோர்க்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதனை வற்புறுத்தி வருகின்றார்கள். வீடற்றோர்க்கு வீட்டுமனை அளிப்பதும் 20 அம்சத் திட்டங்களில் ஒன்றாகும். கடந்த சில பல ஆண்டுகளாக ஒரேயிடத்தில் குடியிருந்து வரும் சொந்த வீடற்ற விவசாயத் தொழிலாளர்க்கு அந்த வீட்டினையே உரிமையாக்கும் சட்டத்தினைக் கொண்டுவர பரிந்துரை கூறியுள்ளார். நம்நாட்டு அரசியல் சட்டப்படி குற்றமாயினும் தொடர்ந்து வெவ்வேறு முறையில் இருந்த கொத்தடிமை முறை இப்பொருளாதாரத் திட்டத்தால் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வேறு வேலைகளும் தரப்பட்டுள்ளன.

நாட்டுப்புற மக்கள் பெரு வட்டி வாங்குவோர் கையில் சிக்கி வாங்கிய அசலைவிடப் பலமடங்கு தொகை வட்டியாகவே செலுத்தியும் கடன் சுமையால் வாழ்வு நலிந்து வருவதனைக் கண்டு தமிழ் நாட்டில் சில நாட்களுக்கு முன்பு கடன் சுமை நீக்கச் சட்டம் மக்களாட்சித் தலைவரால் அறிவிக்கப் பட்டுள்ளது. இதனால் நாட்டுப்புற சிறிய குடியானவர்கள், நிலமற்ற உழவர்கள், நிலமற்ற வினைஞர்கள் எல்லோரும் கடன் நிவாரணம் பெற்றுள்ளனர். நகையை அவர்கள் அடகு வைத்திருந்தால் உடனடியாக நகையை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்; நகை அடகு பிடித்தவர் மற்றொருவரிடம் அடகு வைத்திருந்தால் அடகுப் பணத்தைக் கொடுத்து மீட்டு உரியவர்களிடம் யாதொன்றும் பெறாமல் திருப்பிக் கொடுக்கவேண்டும் எனவும் சட்டம் குறிப்பிடுகிறது. இதனால் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ளார் பெரும்பயன் அடைவர். கடன் நிவாரணம் செய்துள்ளதோடு தேவையான செலவுகட்குப் பொருள் பெற்றுத் தவணை முறையில் செலுத்த வசதியாக அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடனுதவி அளிக்க முன்வந்துள்ளன. நிலமற்றோர், சிறு கடைக்காரார்கள், கை வினைஞர்கள், சிறு குடியானவர்கள் போன்றோர் மீண்டும் பெருவட்டி வாங்குவோரிடம் சிக்க வேண்டியதில்லை. இது நல்லதொரு அறிகுறியாகும்.

நம்நாட்டில் சிறப்பாக தமிழகத்தில் உழவுக்கு அடுத்தபடியாக வேலை வாய்ப்பளிப்பது கைத்தறித் தொழிலாகும். அத்தகைய தொழில் செய்வோரின் வாழ்வு வளம்பெறவில்லை. அவர்கட்கு வேலைக்கு வேண்டிய பொருளை வழங்க கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளன. கால்வழி கால்வழியாக அத்தொழிலைச் செய்வோருக்கு நல்ல சம்பளமும் வசதிகளும் வழங்க வசதியான தொழிலகங்கள் தோன்ற வேண்டும். இத்தொழிலகங்களில் வேலையற்றுள்ள நெசவுத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்படவேண்டும். நியாயமான விலையில் நூல் தாராளமாகக் கிடைக்கவும், வீடுகளில் தறிகளைப்போட கடனுதவி அளிக்கவும் வழிமுறைகள் காணப்பட வேண்டும். இவைகட்கும் மேலாக சிலவகையான துணிகள் நெய்வதனைக் கைத்தறிகட்கே விடுவதோடு அவைகட்கு நல்ல விற்பனைச் சந்தையையும் உருவாக்கவேண்டும்.

20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் ஓர் அம்சம் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு வழங்குவது. இதனடிப்படையில் உற்பத்திக் கூறுகளில் தொழிலாளர்களை ஈடுபடச் செய்ய உற்பத்திச் சாலைகளில் குழுக்கள் ஏற்பட வழி செய்யப் பட்டுப் பல தொழிலகங்களில் கூட்டுக் குழுக்களும் பணி மட்ட குழுக்களும் செயல்படத் துவங்கியுள்ளன. நாட்டில் செயல் திறன் மிக்க வினைஞர்களை உருவாக்க பயிற்சி நல்க எல்லாத் தொழிலதிபர்களும் வற்புறுத்தப் பட்டுள்ளார்கள். இதனைக் கடமையென எல்லோரும் உணரும்படிச் செய்யப்பட்டுள்ளது. நாட்டில் வேலையில்லாது துன்புறுபவர்கள் பலராயினும் பயிற்சி பெற்ற வினைஞர்களுக்கு உடன

டியாக வேலைகிடைப்பதும் கண்கூடு. குறைந்த விலையில் ஏடுகளும் நூல்களும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டு ஏழை எளிய மாணவர்களின் செலவுப் பளுவைக் குறைத்துள்ளோம்.

இவ்வாறு பல திட்டங்களைச் செயல்படுத்தியதன் பயன்களை ஆராய்ந்து பார்த்ததில் இவை எல்லாம் ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்குத் துணைபுரிபவைகளாக உள்ளன. எனவே திருமதி இந்திராகாந்தி அவர்களால் கொண்டுவரப் பெற்ற 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் மக்கள் திட்டமாகும். இந்த மக்கள் திட்டம் சிறப்புற நடைமுறைக்கு வரச் செய்வது ஒவ்வொரு குடிமகனுக்கும் கடமையாகும். சமுதாயப் பணியாளர்கள் தாங்கள் வாழுகின்ற வட்டாரங்கட்கு ஏற்ற பணிகளை எடுத்துக் கொண்டு தக்க அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து பணிகளின் பயன்கள் நேரடியாக மக்களை அடையச் செய்யப் பாடுபடவேண்டும். இந்தப்பணியை நாட்டுப்பற்றோடும் உயர்ந்த நோக்கோடும் மேற்கொள்ளவேண்டும். சமுதாயப் பணியாளர்கள் இவ்வாறு செயல்பட்டு 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் வெற்றிக்குப் பாடுபடவேண்டும். மேற்கூறப்பட்ட திட்டங்கள் எல்லாம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டால் இந்தியநாடு ஒளிநிறைந்த சமுதாயத்தினைக் கொண்டு இலங்கும்; நம்பிக்கை அலை தோன்றி நிலைக்கும்; நாடு முன்னேறி பீடுநடை போடும். நாம் நம் கடமைகளைச் செவ்வனே செய்வோமாக.

(10-8-76) அன்று கோவை வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது. அனுமதி பெற்று வெளியிடப்படுகிறது. நன்றி-வானொலி நிலையம், கோவை.

## பெண்களுக்குப் பயிற்சி

பெண்களுக்குத் தகுந்த மதிப்பினைக் கொடுத்துத்தான் எல்லா நாடுகளும் புகழடைந்திருக்கின்றன. மனு கூறுவதுபோல் எங்குப் பெண்கள் போற்றப்படுகிறார்களோ அங்கே இறை இன்பம் உண்டு; எங்குப் போற்றப்படவில்லையோ அங்கே எல்லா முயற்சியும், உழைப்பும் வீண்; துன்பத்தில் உழலும் எந்த நாடும், குடும்பமும் முன்னேற முடியாது. ஆண் பிள்ளைகளைப் போன்றே பெண் பிள்ளைகளும் போற்றப்படவேண்டும்; கல்வி பயிற்றுவிக்கப்படவேண்டும்.

பண்பை வளர்க்கும் வரலாறு, புராணம், குடும்பம் நடத்தல், இல்லக் கலை, மனையறம், தத்துவம், முதலியவற்றோடு தையற் கலை, சமயற் கலை, வீட்டு வேலையில் ஒழுங்குமுறை, குழந்தை வளர்ப்பு முதலியனவும் பெண்களுக்குக் கற்பித்தல் வேண்டும். அவர்கள் பயிற்சியில் தவம், இறைவழிபாடு, சிந்தனை முதலியவை இன்றியமையாதனவாய் இருத்தல் வேண்டும். இவற்றோடு வீர உணர்ச்சியும் அவர்கள் பெறுதல் வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்

# இருபது அம்சப் பொருளாதாரத் திட்டமும் ஆசிரியர்களும்...

● டாக்டர். எஸ். சுப்பிரமணியம் பி.இ., எம்.எஸ்சி.

ஒரு நாட்டின் ஆக்கபூர்வமான திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் பங்கு உண்டு. தாங்களே திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமும் மற்றவர்க்கு எடுத்துரைப்பதன் மூலமும் இப்பங்கினை நிறைவேற்றலாம். இத் துறையில் ஆசிரியர்களின் பங்கு மிகப் பெரியது. தங்களிடம் கற்கும் மாணவர்கள் மக்களாட்சியில் நம்பிக்கையும் ஒழுங்கும் நாட்டுப்பற்றும் உடையவர்களாகச் செய்து நல்ல குடிமக்களாக விளங்கச் செய்ய வல்லவர்கள் ஆசிரியர்களே. எனவே, நம் நாட்டின் பிரதமர் அளித்த இருபது அம்சத் திட்டத்தின் உயிர்ப்பொருளை நன்கு உணர்ந்து தாங்களும் செயல்பட்டு மற்றவர்களுக்கும் உணர்த்துவதில் ஆசிரியர்களின் பங்கு மிகப்பெரியது.

இருபது அம்சத் திட்டத்தின் உயிர்ப்பொருளில் ஒன்று மாணவர்களின் குறைகளைப் போக்குதல். ஆசிரியர்கள் சிறந்த தலைவர்களாகவும் அன்புடைய பெற்றோர்களாகவும் திகழ்ந்து மாணவர்களின் குறைகளையும் குறைகளுக்கான மூலகாரணங்களையும் நன்றாக அறிந்து காரணத்தை அறவே நீக்கி வழிகளைக்கண்டு இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்ற வழிமுறைகளைச் சொல்லி மாணவர்களின் குறைகளைப்போக்க முனைய வேண்டும். பிரதமர் அவர்கள் குறிப்பிடுவதுபோல மாணவர்களின் திறனை அறிந்து அத்திறனில் அவர்களுடைய ஊக்கமும் உழைப்பும் செல்லுமாறு நெறிப்படுத்தவேண்டும். இவ்வாறு செய்தால் மாணவர்கள் ஈடுபாட்டோடு கற்றுக் கற்றவைகளைச் செயல்படுத்தவும் மன உளைச்சல் இல்லாமல் வாழவும் வழி ஏற்படும்.

இருபது அம்சத் திட்டத்தில் மாணவர்களுக்கான எழுது கருவிகள், நோட்டுப் புத்தகங்கள் போன்றவற்றை மலிவு விலையில் கிடைக்க ஏற்பாடு செய்வது ஒன்றாகும். இது ஒரு நல்ல திட்டம் என்பதில் ஐயமில்லை. இதனோடு எந்தெந்த இடத்தில் இத்தகைய பொருட்கள் வீணாவதைத் தவிர்த்தும் மாற்றுப்பொருள்களைப் பயன்படுத்தியும் எல்லோர்க்கும் சரளமாகவும் மலிவாகவும் கிடைக்க வழிவகுக்கலாம் என்று ஆசிரியர்கள் தங்கள் சிந்தனையைச்

---

''ஏழைகளுக்கு நீதி கிடைப்பதையும் பொருளாதார மாற்றத்தையும் தடுக்கச் சட்டம் குறுக்கே நிற்பதை நம்மால் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

—பிரதமர் இந்திரா காந்தி

செலவிடுவது நாட்டிற்கும் அவர்களுக்கும் நன்மை பயக்கும்.

மாணவர்கள் உள்ளத்தில் எளிமையும் செயலில் உரமும், திறமும் கருத்தில் தெளிவும் உண்டாகுமாறு ஆசிரியர்களின் போதனையும் செயல்முறைகளும் அமைவது நம் நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் மிகவும் துணைபுரியும்.

இன்றைய இளைஞர்களே இந்திய நாட்டின் எதிர்காலக் குடிமக்கள் ஆவார்கள். அவர்களுடைய மனமும் செயலும் செம்மையாக அமைந்து வளர்ந்தால் எதிர்கால இந்தியா மிகவும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கும். எனவே, தொடக்கப்பள்ளி ஆசிரியர் முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்வரை உள்ள எல்லா ஆசிரியர்களும் மாணவர்களின் மனச் செம்மையையும் திறனையும் வளர்க்க உழைப்பதே நம் நாட்டுப் பிரதமர் அளித்த 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் வெற்றிக்கு ஆசிரியர்கள் கொடுக்கும் பெரிய ஒத்துழைப்பாகும்.

---

''நம்நாட்டுக்குக் குறிப்பாக குடியாட்சிதான் தேவை. எனெனில் நம்நாட்டு மக்கள் பலதரப்பட்டவர்கள். அவரவர் தனித்தன்மையைக் காக்கவே விரும்புகிறார்கள். ஐக்கியத்துடன் அவை காப்பாற்றப்படவேண்டும்''.

''எல்லா வகையிலும் இந்தியா முன்னேறத் துடிக்கிறது. எந்தத் தொல்லையும் ஏற்றுச் சமாளிக்க எஃகு உள்ளம் இளைஞர்களுக்கு வேண்டும். இந்தியாவை வழி நடத்த அவர்கள் முன்வர வேண்டும். வழி நடத்தப் பிறர் வருகிறார்களா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. தாங்களே தலைமை ஏற்க வேண்டும்''.

''இளைஞர்களே! நம் நாட்டினை வலிமையும், நிலைபேறும், நன்மையும் மிக்க நாடாக விளங்கச் செய்யப் பாடுபடுங்கள். அச்சுறுத்தலையும் வற்புறுத்தலையும் தகர்த்து எறியுங்கள்''.

—பிரதமர் இந்திரா காந்தி

நாம் ஒன்றே, நாம் ஒன்றே; எங்களைப் பிரிக்க எவராலும் முடியாது. நாம் ஒன்றே, எங்களிடம் தோன்றும் மாறுபாடு வெறும் மாயையே'' என்று, இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும், ஒருங்கே சேர்ந்து, ஒவ்வொரு நாள் காலையிலும் பத்து நிமிஷம் ஒருங்கேசிந்திப்பார்களானால் அந்தச் சிந்தனையால் எழும் சக்தியை அளவிட முடியாது.

**—சகோதரி நிவேதிதா**

தனியான இடத்தில் தங்கிக் கண்ணீர் மல்க ஆண்டவனையே வேண்டுக. அவன் உன் மனத்திலுள்ள அழுக்கையும் துயரத்தையும் போக்குவான்.

**—அன்னை சாரதாமணி**

# 20 அம்சப் பொருளாதாரத் திட்ட வெற்றிக்கு மாணவர் பங்கு...

● **திரு. க. பொன்னுச்சாமி, (ஐந்தாம் ஆண்டு பி.இ.,)**

சமுதாயத்தைச் சீர்திருத்துவது நாட்டின் தவறான போக்கை மாற்றுவது என்பதே எங்கும் பேச்சாக இருந்தது; நம்மில் பலருக்கு அதுவே வாழ்வாக இருந்தது. ஆனால் நம்மை நாமே சீர்திருத்துவதையோ, சீர்தூக்கிப் பார்ப்பதையோ நாம் எண்ணுவதாக இல்லை. இந்நிலையில் இருபதம்சத் திட்டத்தைப் பாரதப் பிரதமர் அறிவித்தார். அது, கடந்த 28 ஆண்டுகளில் மக்களுக்குக் கிடைத்த பொருளாதாரச் சுதந்திரத்தின் முதல் வரப்பிரசாதம். பொருளாதாரக்குற்றம் செய்வோரைக் கண்டித்து பொருளாதாரச் சீர்கேட்டில் சிக்கித் தவிக்கும் ஏழை மக்கள், நடுத்தர மக்கள் போன்றோருக்கு வாழ்வளிப்பதே அதன் இலட்சியம். புரட்சிக்கும் புதுமைக்கும் எந்நாளும் புகலிடம் அளித்து வருவது இளைய சமுதாயம். இருபது அம்சத் திட்டத்தின் வெற்றி மக்களுக்குக் கிடைத்த வெற்றி. மனிதனை மனிதன் சுரண்டும் வர்க்கத்தையும் வழக்கத்தையும் ஒழித்து அதனால் அடையப்போகும் வெற்றி; அதன் வெற்றிக்குப் பாடுபடுவது இளைய சமுதாயத்தின் தலைச்சமுதாயமெனக் கருதப்படும் மாணவர் சமுதாயத்தின் முக்கிய கடமையாகும்.

பெருகிவரும் மக்கள் தொகையையும் பொங்கிவரும் பொருளாதாரப் பிரச்சினைகளையும் கட்டுப்படுத்தும் கடமையும் பொறுப்பும் மக்கள் கையில்தான் இருக்கிறது. அறிந்தும் அறியாதாராகச் சிலர் அக்கறையின்றி இருக்க, ஒன்றும் அறியாதார்களாக நம் மக்களில் மிகுதியாக இருக்கின்றனர். அறியாமை திட்டத்தின் வெற்றிக்கு ஒரு தடங்கலாகும்.

தன் குடும்பமே உலகம்; தன் பிரச்சினையே உலகப் பிரச்சினை என்று வாழும் ஏழை மக்களுக்கும் படிப்பறிவில்லாதவர்களுக்கும் நாட்டின் நிலையையும். திட்டமளிக்கும் உதவியையும் எடுத்துச் சொல்லுவதே மாணவர் கடமையாகும். ஏழை, நடுத்தர மக்களும் விவசாயிகளும், தொழிலாளர்களும் நாட்டு நிலையையும், திட்டத்தின் மேன்மையையும் புரிந்துகொண்டார்களானால் வரப்போகும் வெற்றிகளுக்கு யாரும் தடையாக இருக்க முடியாது.

பொருளாதாரத்துறையில் உற்பத்தியின் அடிப்படையிலும், தொழில் நுட்ப அடிப்படையிலும் பாரத நாடு ஓரளவு சிறப்பாக

''அரசியல் சட்டங்கள் நம் வாழ்விற்கு நலம் பயக்க ஏற்பட்டவை. நம் வாழ்வுமுறைகள் மாறுவதற்கேற்ப சட்டங்களும் மாறுதலடைவதுதான் இயற்கை''

—பிரதமர் இந்திரா காந்தி

முன்னேறியும், சமுதாயத்தில் வருமான ஏற்றதாழ்வுகள் முன்னைவிட அதிகம். ஏன்? உலகிலேயே மிகப் பெருமளவு நீர்ப்பாசனச் சாகுபடி, நிலப்பரப்பு இருந்தும் விவசாயத்தில் முன்னணியில் நாம் நிற்கத் தவறியது ஏன்? மேம்பாடுகள் நம்மில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே போய்க்கொண்டிருப்பதேன்? இத்தனைக்கும் காரணம் நாம் சமூகத்தில் பின்தங்கிய மக்கள் நிலையை உயர்த்தாததும், சமூகப்பொருளாதார மாறுதலுக்கென்று உருவான இருபது அம்சத்திட்டம் முதலான அனைத்துத் திட்டங்களையும் அவர்கள் உணராததும்தான். இனியும் நாம் எதிர்பார்த்ததற்கும் மேலான வெற்றி கிடைக்க வேண்டுமானல் பின்தங்கிய மக்கள் நம் அரசின் திட்டங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்; ஒத்துழைக்க வேண்டும்.

அதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுவதே நம் நாட்டுக்கு நாம் செய்யவேண்டியதாகும். ஒரு தொழிலும் கல்லாதவன் திருட்டுத்தொழிலைக் கற்றவனுவது போல இத் திட்டத்தின் வெற்றிக்குப் பாடுபடாத மாணவர் நாட்டுப்பற்று இல்லாதவர் என்று கூறலாம். இத்திட்டம் முழுக்க வெற்றியடையும் போது, "கண்ணீர் உப்பிட்டு, காவேரி நீரிட்டு கலயங்கள் ஆடுது சோறின்றி, இதயங்கள் ஏங்குது வாழ்வின்றி" என்ற நிலையை எங்கே போய்த் தேடுவது என்ற நிலைமை உருவாகும். இத் திட்டம் நம் நாட்டின் முன்னேற்றத்தின் ஒரு துவக்கம். இதன் வெற்றிக்கு நம் பணி, நாட்டுப்பணிக்கு ஓர் ஆரம்பம். இன்னும் எவ்வளவோ!

---

"மக்கள் தொகையை வைத்தோ நிலப்பரப்பை வைத்தோ ஒரு நாட்டின் தரத்தை எடை போடுவதில்லை. அந்த நாட்டின் இலட்சியமும் கொள்கைகளும் ஆக்க முயற்சிகளும் எவ்வளவு உயர்ந்தவையாயிருக்கின்றன என்பதுதான் முக்கியம்."

"சட்டம் என்பது சமூக நீதிக்கான ஒரு கருவியாக விளங்க வேண்டும். நாட்டுக்குப் புதுவடிவம் கொடுக்கும் முயற்சிகளில் சட்டத்தின்பணி உயிர்த்துடிப்புடன் இருக்கவேண்டும்."

"நாட்டுக்காக நாம்! என்ற உணர்வுடன் மக்கள் ஒவ்வொருவரும் பணியாற்றவேண்டும். அதன் மூலம்தான் புதிய இந்தியாவை நாம் நிர்மாணிக்கமுடியும்

"நான் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. பலன் வேண்டுமானல், கடின உழைப்பு வேண்டும். நெடிய நோக்கு இருந்தால்தான் நெடுந்தூரம் செல்ல முடியும். இலட்சியம் பற்றிக் கனவு காணும் திறமையும், சிந்தனைத் திறமையும் பெரிதாக இல்லாவிட்டால், நம்மால் பெரிதாக எதையும் சாதிக்கமுடியாது."

—பிரதமர் இந்திரா காந்

# பொருளாதாரத் திட்டத்தில் மாணவர் பங்கு

● திரு. இரா. சீனிவாசன், (முதல் ஆண்டு எம்.ஏ.)

**முன்னுரை**

சுதந்திரம் பெற்று வெள்ளி விழாக் கொண்டாடிவிட்டோம். எனினும் உண்மையான பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியாதவண்ணம் வறுமை, பஞ்சம், வேலையின்மை, ஊழல் முதலியன நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக உள்ள நிலையினைக் காணலாம். இதைக் களைய, பாரதப் பிரதமரால், ஏற்படுத்தப்பட்ட சிறப்பான திட்டம்தான் இருபது அம்சத் திட்டமாகும். நாட்டில் புதியதொரு சூழ்நிலையையும், தோற்றத்தையும் அவசர நிலைமை உருவாக்கியிருக்கிறது. இது நாட்டில் அவசர உணர்வை ஏற்படுத்தி நாட்டை எதிர்நோக்கியுள்ள சில உண்மையான பிரச்சினைகளுக்கு அரசு தீர்வுகாண வகை செய்திருக்கிறது. நல்லதொரு சமுதாயம் உருவாக இத்திட்டம் சிறந்த முன்னேடியாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**மாணவர்களின் நிலை**

இருபது அம்சத் திட்டத்தில் பாரத நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் பங்கு உண்டு; இத்திட்டத்தைச் செயலாக்குவதில் மாணவர்களின் பணி தலையாய இடத்தை வகிக்கின்றது. பல நிலைகளைக் கொண்ட இத்திட்டம் முதல் கட்டமாகப் பொருளாதாரத்தைச் சரியான போக்கில் செலுத்தும். சோஸலிச சமுதாயத்தை அமைக்கவேண்டும்; வறுமையை ஒழிக்கவேண்டும்; மக்களுக்குக் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை வழங்க வேண்டும்; ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவேண்டும். நமது இந்த நோக்கத்தை அடைவதற்கான சீரிய திட்டம்தான் இருபது அம்சத் திட்டம். இன்றைய இளைய தலைமுறையினர் குறிப்பாக மாணவர் சமுதாயம் ஊக்கத்துடன், கட்டுப்பாட்டுடன் ஒற்றுமையாகப் பாடுபடுமானல், வெற்றி என்பது வெகு தொலைவில் இல்லை எனலாம். இத்திட்டத்தில் பல அம்சங்கள் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ளதைக் காணலாம்.

**திட்டத்தில் மாணவர் பங்கு**

பொருள்களின் விலையைக் குறைத்தலில் மாணவர்களின் பணி சிறப்பான இடத்தை வகிக்கின்றது. கிராமங்களில் அரசின் திட்டங்கள் சரிவரப் புரியாத நிலை காணப்படுகின்றது. மாணவர்கள் கிராம மக்களிடம் விலையைக் குறைப்பதற்கான அரசின் நடவடிக்கைகளை எடுத்துக்கூறி அவர்களின் அறியாமையைப் போக்க முயல வேண்டும். நமது நாட்டுத் தந்தை காந்தியடிகள் அவர்கள்

''கிராமத் தன்னிறைவே நாட்டின் உண்மையான சுதந்திரம்'' என்று கூறிய கருத்தை நிறைவேற்றும் பொருட்டு மாணவர்கள் கிராம மக்களிடம் அரசுத் திட்டத்தினைப்பற்றித் தெளிவாகக் கூறி அவர்கள் முழு முயற்சியுடன், கட்டுப்பாட்டுடன் உழைக்கத் தூண்டுகோலாக இருத்தல் அவசியமானதொன்ருகும்.

**மக்களின் அறியாமையை நீக்குதல்**

இந்தியாவில் கிராமக்கடன், நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள்மேல் பெரும் சுமையாக அழுந்தி அவர்களின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக உள்ள நிலையினைக் காண்கின்ருேம். சில தீய சக்திகளின் பிடியில் இவர்கள் அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கிருர்கள்.

கல்வி அறிவில்லாத கிராம மக்களைக் கடன் கொடுக்கும் நிறுவனங்கள், வங்கிகளுக்கு அழைத்துச்சென்று அவைகளால் பெறக்கூடிய முன்னேற்றத்தை நன்கு விளக்கி—உதவி, அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் இச்சீரிய பணியினைச் செயல்படுத்த மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுச் செயல்பட வேண்டும்.

**மின்சார உற்பத்தித் திட்டத்தை நிறைவு படுத்தல்**

பருவமழை பொய்த்திருப்பதால் நாட்டில் பல சிக்கல்கள் உருவாகியுள்ள நிலையினைக் காணலாம். மாணவர்கள் மின்சாரம் உபயோகிப்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்து மக்களுக்குத் தெளிவுபடுத்திச் சிக்கனமான முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்தி உற்பத்தித்துறைக்கு ஒரு தடையாக இல்லாதவாறு மாணவர்கள் தம் பணியினை இயன்ற வரையில் ஆற்றவேண்டும்.

**வரி ஏய்ப்புத் தடுத்தல்**

இந்தியாவில் வரி ஏய்ப்பு மிகவும் அதிகமான அளவில் இருந்து வருகின்றது. அரசின் முயற்சியால் இது படிப்படியாகக் குறைந்து வருகின்ற நிலையினைக் காணலாம். மாணவர்கள் அரசு அதிகாரிகளுடன் ஒத்துழைத்து வரி ஏய்ப்புச் செய்யும் இச்சமூக விரோதிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த ஊக்கத்துடன் விரைந்து செயலாற்ற வேண்டும். பயணச்சீட்டின்றி பேருந்து, மற்றும் புகைவண்டிகளில் பயணம் செய்பவர்களைக் கண்டு, அவர்களைத் தண்டிக்க அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும். இவைகளை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைச் சீரான முறையில் செலுத்த மாணவர்கள் தம் பங்கினை ஏற்கலாம்.

**குறைந்த விலையில் அடிப்படையான தேவைப் பொருட்களை வழங்குதல்**

அரசின் இத்திட்டத்தினுல் விடுதி மாணவர்கள் குறைந்த விலையில் அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் முதலியவற்றைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் இத்திட்டத்தினைப் புரிந்து, எல்லா நிலையிலும் அதிக பயன் பெற்று முன்னேற்றம் அடைய முயலவேண்

டும். உணவுப்பொருட்களைச் சிக்கனமான முறையில் பயன்படுத்தி நாட்டிற்கும், வீட்டிற்கும் நன்மை புரிந்து நன்முறையில் மாணவர்கள் வாழ்வை அமைத்திடல் வேண்டும்.

**புத்தகம்—எழுதும் பொருட்கள் நியாய விலையில் பெறுதல்**

அரசின் திட்டத்தினுல் மாணவர்களுக்குக் குறைந்த விலையில் தரமான புத்தகம் மற்றும் எழுதும் பொருட்கள் கிடைத்து வருகின்றன. இத்திட்டம் ஏழை மாணவனும் படித்து நன்முறையில் கல்விபெற வழி வகுக்கின்றது. மாணவர்கள் இந்நிலையினை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு நமது குறிக்கோளை அடைய அரசுடன் ஒத்துழைத்துக் கட்டுப்பாட்டுடன் செயல்புரிந்து நன்மைகள் பல பெறுவோமாக.

**முடிவுரை**

நமது பாரதப் பிரதமர், "நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட புதிதில் ஏற்பட்ட ஒழுங்குக் கட்டுப்பாடு மூலம் நாட்டின் நிலைமை பெரிதும் திருந்தியது. ஆனல் அந்தக் கட்டுப்பாடு சில அம்சங்களில் தளர்ந்து வருவதாக நான் அறிகிறேன். நாம் இடைவிடாது செயல்படவேண்டும்என்பதையே இது காட்டுகின்றது. இருபது அம்சத் திட்டத்தினை எல்லா நிலையிலும் முழு முயற்சியுடன் செயல்படுத்துவதில் உதவ மக்கள் என்றும் தயங்கக்கூடாது" என்று கூறியுள்ளார். மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் தங்கள் பணியினைச் செம்மையாகச் செய்வதோடு தாங்களே எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும்.

---

## சன்மார்க்கம்

மொழியாலும் நிறத்தாலும் நாட்டாலும் மற்ற
முறையாலும் பிரிஉலகை முழுஒருமைப்படுத்தும்
வழியாதென்று அறிஞர்பலர் வகைவகையே ஆய்ந்து
வகுத்தனர்பல் சட்டதிட்டம் வாழ்வுபெறவில்லை.
பழியேதும் அறியாத சன்மார்க்கம் ஒன்றே
பாழ்பிரிவு நினைவறுத்துப் பரிந்தொருமை கூட்டும்
அழியாத அன்புடைய அப்பாஅம் மார்க்கம்
அவனியெலாம் பரவிநிற்க அருள்புரிவா யின்னே.
மண்ணெல்லாஞ் சன்மார்க்க மலராட்சி வேண்டும்
மார்க்கமெலாஞ் சன்மார்க்க மணங்கமழல் வேண்டும்
கண்ணெல்லாஞ் சன்மார்க்கக் காட்சியுறல் வேண்டும்
காதெல்லாஞ் சன்மார்க்கக் கேள்விநுழைவேண்டும்.
பெண்ணெல்லாஞ் சன்மார்க்கப் பிள்ளைபெறல் வேண்டும்
பேச்செல்லாஞ் சன்மார்க்கப் பேச்சாதல் வேண்டும்
பண்ணெல்லாஞ் சன்மார்க்கப் பாட்டிலெழல் வேண்டும்
பரம்பொருளே சன்மார்க்கப் பணிசெயவேண்டுவனே.

—திரு. வி. க.

# மாணவர்களும் பிரதமரின் பொருளாதாரத் திட்டமும்....

● செல்வி மு. கமலவேணி, (இரண்டாம் ஆண்டு எம்.ஏ.)

''முன்னே இலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடை வில்—எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில்''

என்று பாவேந்தன் பாரதி அன்று கூறியதுபோல் இன்று பாரதப் பிரதமர் விடுத்துள்ள பொருளாதாரக்கொள்கைகள் நம்மை எதிர் நோக்கியிருக்கும் பாரதத்தைப் பீடுநடைபோடச் செய்வதாக அமைந்துள்ளன.

சமுதாய மாற்றமோ—சீர் திருத்தமோ—எதுவாக இருந்தாலும் தனி மனிதன் ஒருவனுலோ அன்றி வெறும் சட்டத்தினுலோ, அவசரக் கொள்கையினுலோ சாதித்துவிட முடியாது. பிரதமர் விடுத்துள்ள இச்சீரிய கொள்கைகளைத் துடிப்பும், ஆர்வமும், இளமையும் கொண்ட மாணவர்களாகிய நம்மால்தான் அன்பும், அறிவும் நிறைந்த பணியால் செயல்படுத்தமுடியும்.

''தொழில் வளம் பெருகத் துணை புரிதல்'' இருபது அம்சக் கொள்கைகளில் ஒன்று. பெரும்பான்மையான பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடங்கள் காலையிலேயே முடிவுபெற்று விடுகின்றன. மாணவர்களில் பலர் பிற்பகலில் தங்கள் கவனத்தைப் படிப்பில் செலுத்த முடியாமல் நேரத்தை வீண் செய்கிறுர்கள். இம்மாணவர்கள் சிறுசிறு தொழில்களைக் கற்றும் செயல்பட்டும் பயனடைந்தால் வேலை கிடைக்கவில்லையே என்று அரசாங்கத்தைச் சாடுவதை நிறுத்தி, தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்கும் தகுதியைப் பெறுவர். நாட்டின் வறுமை நிலையை நீக்கி, வளம் பொருந்திய ஒன்ருக்குவது மாணவர்களாகிய நமது பணியே.

கடத்தல்காரர்களைக் கடுமையாகத் தண்டித்தல் பொருளாதாரக் கொள்கையில் ஒன்று. கள்ளக்கடத்தல்காரர்களுக்கு மறைமுகமாக நாமே இதுவரை இடம் கொடுத்து வந்துள்ளோம். கள்ளக்கடத்தல் துணிகளை வரிசையில் நின்று வாங்கி அணிபவர்களில் பலர் மாணவர்கள். நாட்டின் நிலையுணர்ந்து இதன் விளைவுகளை அறிந்து தாமும் வாங்காமல் பிறரையும் தடுத்து நலிந்து வரும் நெசவுத்தொழில்களுக்குச் சிறப்பிடம் கொடுத்து நம்நாட்டுத் துணிகளை அணிந்து உதவமுடியும்.

---

''நமது நாட்டிற்கும் அதன் முன்னேற்றத்திற்கும் உழைப்பதாக விதி செய்து கொள்வதுதான் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் மிக முக்கியமான அம்சமாயிருக்கவேண்டும்.

—பிரதமர் இந்திரா காந்தி

அல்லும் பகலும் உழைத்து குறைந்த ஊதியம் பெற்று வரும் தொழிலாளர்களையும், வாய் செத்தவர்களையும் அறிவின் மிக்கார் சுரண்டுவதனைக் காண்கின்றோம். ''விலைவாசியைக் குறைத்தல்'' திட்டங்களில் முதன்மையானது. நமது அரசாங்கம் விலைப் பட்டியலை வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. அதன்படி வைக்கும் விலைக்குத் தகுந்தவாறு பொருட்களைத் தருகிறார்களா? தரம், நிறை குறையாமல் விற்கிறார்களா? கலப்படமின்றிப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றனவா? என்பனவற்றை மாணவர்கள் நேரில் கண்காணிக்கலாம். மேலும் படிப்பு அறிவு இல்லாத கிராம வாசிகளை வியாபாரிகள் ஏமாற்றுவதையும் தடுக்கலாம். இதையெல்லாம் தேசிய மாணவர்படை மாணவர்கள் கவனித்து வந்தால், அந்நேரங்களில் பொருட்கள் வாங்குவோர் ஏமாறுவதைத் தடுக்க முடிகின்றது.

ஜனநாயகம் கொடுத்துள்ள சில அடிப்படை உரிமைகளைக் கொண்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் எப்படியும் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுவதாக நினைத்துத் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளும் 'வரி ஏய்ப்பவரை' எங்குக் கண்டாலும் துணிந்து அவர்களை அரசாங்கத்தில் பிடித்துக்கொடுக்க உரிமையுண்டு. தன்னைப் பற்றிமட்டும் சிந்திக்காமல் பிறரையும் மனதில் கொண்டு மாணவராகிய நாம் நமது பங்கில் ஒருசிறு துளி செய்தால், நாடு பல வழிகளிலும் முன்னேறும்.

---

ஒரு தேசத்தின் வருங்காலம் அதன் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும்தான் உருவாகிறது. அவற்றின் மூலமாக இளம் தலைமுறையினர் நாட்டின் பாரம் பரியத்துடன் இணைந்து, புதிய அறிவைப் பெறுகிறார்கள். வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான பல்வேறு திறமைகளைக் கல்வி, நாட்டுக்கு அளிக்கிறது.

—பிரதமர் இந்திரா காந்தி

---

நமது நாட்டின் முதுகெலும்பு போல் உள்ளது விவசாயம். விவசாயி, போதுமான நீர் வளமின்றியும், நவீன முறையில் பயிரிடும் ஆற்றல் இன்றியும் இருக்கிறான். ''நிலநீர் எடுத்து நீர்வளம் பெருக்குதல்'' சிறப்பு வாய்ந்த கொள்கையாகும். இதற்காக நமது அரசாங்கம் ஒவ்வொரு கிராமத்திலும், கடன் வங்கிகளை ஏற்படுத்தியுள்ளது. இதையறியாத கிராமவாசிகள், வட்டிக் கடைக்காரர்களிடமும், பெரும் பணக்காரர்களிடமும் நிலத்தை, அதிக வட்டிக்கு அடமானமாக வைத்துக் கடன் வாங்கி கிணறுகள் வெட்டி, பாதியில் விட்டு, பின் தங்கள் காணி நிலத்தையும் இழந்து விடுகின்றனர். இதை நன்கு தெரிந்த நாம் அவர்களுக்கு அரசாங்கம் அளிக்கவிருக்கும் கடன் உதவிகளைப்பற்றி எடுத்துரைக்கலாம்.

மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் தங்களுக்கு அருகாமையிலுள்ள கிராமங்களுக்கு நேரில் சென்று 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தினை எடுத்துரைக்கலாம். சமூகப்பணி, மாணவர்கள் இதைக் கவர்ச்சிகரமாகவும், நாடகங்கள் மூலமும் தெரிவிக்கலாம். சமூகப்பணி மாணவர்கள் விடுமுறை நாட்களில் கிணறுகள் வெட்டி நீர் வளம் அளித்து வருகின்றனர். இதனால் நிலங்களைக் கடன் தொல்லைகளால் இழக்கவிருக்கும் விவசாயி தன் நிலத்தையும் கண்காணித்து நீர்வளம் பெறவும் நம்மால் ஒரு சிறிது உதவமுடிகிறது. பிரதமர் விடுத்துள்ள இனிமையான பொருளாதாரக் கொள்கைகளைக்கொண்டு நாடு புத்துணர்ச்சி பெற மாணவர்கள் பங்கு ஏற்றால், நாடு விழிப்புணர்ச்சி பெறும். தூங்கிக்கிடக்கும் ஒரு சில சமுதாயத்தினரையும் அடிமை ஊதியம் பெற்று வாழும் மக்களையும், மாணவர்கள் தங்கள் அன்பான அறிவால் தெளிவடையச் செய்து வளரவும், வாழவும் வழிகாட்டிடலாம்.

'காலம் என்பது கறங்குபோல் சுழன்று
மேலது கீழா, கீழதுமேலா மாற்றிடும்'

என்பது போல மாற்றும் தன்மையுடையது, என்பதை இந்த ஓராண்டுக்காலம் நிரூபித்து வருவதை மேலும் வலுவடையச் செய்ய மாணவ இனத்தால் முடியும்.

---

## ● அட்டைப்பட விளக்கம் ●

உழவு, தொழில் ஆகியன வளர்ந்து, குடியிருப்பு வசதிகள் பெருகி, ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ்ந்து, நிர்வாகமும் தொழில் செய்வோரும் இணைந்து, பொருள்வளமும் மனநலமும் பெருக்குகின்ற சமுதாயத்தினை அமைப்பதே நம்நாட்டின் குறிக்கோள். இதனையே காந்தியடிகளும் நேரு அவர்களும் குறிப்பிட்டார்கள்; இதற்காகவே அவர்கள் பாடுபட்டார்கள். பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களும் இதற்காகவே தன்னை அர்ப்பணித்து அனைத்திந்திய மக்களின் நல்ல ஒத்துழைப்பினையும் வேண்டுகின்றார் என்பதனைக் குறிப்பிடுவதே இவ் அட்டைப்பட விளக்கமாகும்.

அட்டைப்படத்தினை உதவியவர்:
**திரு. சுவாமிநாதன்**

''இந்திய மக்கள் நலனுக்காக நேரு போற்றிவந்த இலட்சியங்களை முறியடித்தவள் என்று என் பெயர் வரலாற்றில் இடம்பெற நான் விரும்பவில்லை. அதே சமயத்தில் நேருவும் காந்தி அடிகளும் விட்டுச் சென்ற காரியம் தடுக்கப்படும்போதோ அல்லது அதற்கு ஆபத்து வரும்போதோ உறுதியுடன் செயல்படத் தவறியவர் என்ற அவப் பெயரைத் தேடிக் கொள்ளவும் நான் விரும்பவில்லை''.

—பிரதமர் இந்திரா காந்தி

## பி. எஸ். ஜி. & சன்ஸ் அறநிலையம் (1926)

### பி. எஸ். ஜி. தொடக்கநிலைப் பள்ளிகள்

| வேடபட்டி (1943) | | பூளைமேடு (1944) | |
|---|---|---|---|
| மாணவர்கள் | ஆசிரியர்கள் | மாணவர்கள் | ஆசிரியர்கள் |
| 455 | 11 | 918 | 23 |

### சர்வஜன உயர்நிலைப்பள்ளி (1924)

| இதுவரை பள்ளி இறுதி வகுப்புவரை கற்றவர்கள் | தற்போது உள்ள மாணவர்கள் | ஆசிரியர்களும் பிற அலுவலர்களும் |
|---|---|---|
| 12,929 | 1,675 | 70 |

### பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி (1947)

| பட்டம் பெற்றோர் | | | | தற்போது | |
|---|---|---|---|---|---|
| பி.எஸ்ஸி., பி.ஏ., பி.காம். | எம். ஏ, எம்.எஸ்ஸி. எம். காம். | எம். லிட்., | பிஎச்.டி. | படிக்கும் மாணவர்கள் | ஆசிரியர்களும் பிற அலுவலரும் |
| 2,315 | 895 | 3 | 4 | 2,914 | 194 |

### பி. எஸ். ஜி. பாலிடெக்னிக் (1939)

| டிப்ளமோ பெற்றோர் | தற்போது கற்போர் | ஆசிரியர்களும் பிற அலுவலரும் |
|---|---|---|
| 3,662 | 397 | 61 |

### பி. எஸ். ஜி. பொறியியற் கல்லூரி (1951)

| பட்டம் பெற்றோர் | | | தற்போது | |
|---|---|---|---|---|
| பி.இ., பி.டெக். பி. எஸ்ஸி. (அப்ளைடு சயன்சு) | எம். எஸ்ஸி. எம்.பி.ஏ. எம். டெக் | பிஎச்.டி. | படிக்கும் மாணவர்கள் | ஆசிரியர்களும் பிறரும் |
| 2,137 | 733 | 6 | 1,361 | 260 |

### பி. எஸ். ஜி. தொழிலகம் (1929)

| தொழிலில் பல வகையான பயிற்சி பெற்றுச் சென்றவர்கள் | தற்போது பயிற்சியாளர்கள் | தற்போது பணிபுரிவோர் |
|---|---|---|
| 15,000 பேர்களுக்கு மேல் | 475 | 1,188 |

### கலைக்கதிர் (1948)

அடைப்புக்குள் இடப்பெற்றவை நிறுவிய ஆண்டுகளைக் குறிக்கும்.

*with the best compliments from*



# PSG & Sons' Charities Institutions

1. PSG Basic School — Vedapatti
2. PSG Basic School — Peelamedu
3. Sarvajana High School — Peelamedu
4. PSG Arts College — Kalapatti
5. PSG Polytechnic — Peelamedu
6. PSG College of Technology — Peelamedu
7. PSG & Sons' Charities Metallurgy & Foundry Division — Neelambur
8. PSG Consultancy and Project Development Centre
9. Kalaikathir (a Scientific Tamil Monthly magazine)

PEELAMEDU
COIMBATORE

**G. R. Damodaran**
*Managing Trustee*

▷ kalaikathir achchagam, coimbatore-641 037